






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 19 21.05.2026




ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

**பரமபதசோபானம்**

*9-படிகளாவன:-*

*(1) தத்துவங்கள் முதலிய வற்றை வகுத்து அறிதல்*
*(2) மனந்தளர்தல்*
*(3) உலகஸுகங்களில் ஆசையறுதல்*
*(4) தம் பாபங்களின் மிகுதியால் இனி வரக்கிடக்கும் நரகா நுபவம் முதலிய துன்பங்களுக்கு அஞ்சுதல்*
*(5) எம்பெருமான் மோக்ஷத்தை அருள்வதற்குக் காரணமான உபாயத்தை அநுஷ்டித்தல்*
*(6) இச்சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல்*
*(7) அர்ச்சிராதிமார்க் கத்தால் செல்லுதல்*
*(8) ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்யலோகத்தைச் சேர்தல்*
*(9) அங்கு ஸர்வேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்து அனு பவித்து அந்த ஆநந்தத்திலேயே மூழ்கிக்கிடத்தல்.*

*இந்த 9-விஷயங் களையும் இப்பிரபந்தத்தில் சுருக்கியும், ரஹஸ்யத்தில் மிக விரித்தும் அருளியிருக்கிறார் ஸ்ரீ தேசிகன்.*

*************************************************************

பின் இதழிலிருந்து தொடர்ச்சி.

**- ஸம்ஸாரத்தில் உழன்று வருந்திய ஜீவன் ஸம்ஸார பந்தம் நீங்கப்பெற்றுப் பரமபதம் சேருங்கால் பெறும் தேஜஸ்ஸும் பெருமையும் இப்பாசுரத்தில் ஆறு உபமாநங்களால் விளக்கப்படு கின்றன. ராஹு என்னும் ஸர்ப்பம் பற்றி விட்டபிறகு ஸூர் யனுக்குப் பிரகாசம் மிக அதிகமாகும். அழுக்கடைந்து நின்ற நன் முத்து நன்கு சுத்தம் செய்யப்பட்டவுடன் தன் இயற்கையான ஒளி வீசப்பெறுகின் றது. கடலிற்சென்ற ஓடம் வழிதப்பிச் சென்று பின் கரை சேர்ந்தவுடன் அதிலுள்ள யாத்ரிகர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லை இலது. ஒரு யானை பெரிய காட்டுத் தீயில் அகப்பட்டுத் தவித்து நின்று. பின் தெய்விகமாய் அத்தீ அணைய, அதினின்றும் வெளியேறியபின் அதன் மகிழ்ச்சி கூறுந்தரமன்று. ஒரு தலைவி ஒரு தலைவனை அடையவிரும்பி அது பெறாது மடலூர முற்பட்டுப் பின் இஷ்டஸித்தியைப் பெற்றதும் அவள் பெருமிதங்**

கொள்வாள். இங்ஙனமே தலைவிக்காக மடலூரும் தலைவனும் தன் இஷ்டம்பெற்று மிக மகிழ்வான். ஓர் அரசன் தன் பிழையால் சிறிதுகாலம் ஒரு சிறை யில் இருக்கப்பெற்றுப் பின் பிழையற்றவனெனத் தீர்ந்து சிறைநீங்கி மீண்டும் தனது ராஜ்யத்தைப்பெற்றால் அவன் ஆநந்தக் கடலில் மூழ்கி நிற்பான். அங்ஙனமே இதுகாறும் நம் உண்மையான ஸ்வரூபத்தை அறியாமற்செய்து மறைத்துவந்த ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கப் பெற்ற நாம் ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீமந்நாராயணனுடன் கலந்து அவனுக்குக் கைங்கர்யம்செய்து அவனை அனுபவிக்கப் பெற்றோம். இங்ஙனம் பரிபூர்ண கைங்கர்யம் செய்து அநுபவித்தலே ஒன்பதாவது படியாகும். இதுவே முக்யமான பலனும் ஆம்.

*******************************************************

இக்கர்மபூமியில் ஸதாசார்ய கடாக்ஷத்தால் விவேகத் தைப் பெற்று, இதுகாறும் வீணே கழிந்த காலத்திற்கு மனம் தத்த ளித்து, ஸம்ஸார ஸுகங்களில் விருப்பம் நீங்கி, வரப்போகும் நரகா நுபவத்திற்கு அஞ்சி, உபாயத்தை அநுஷ்டித்து, சரீரத்தினின்று புறப்பட்டு, அர்ச்சிராதிகதியால் சென்று, பரமபதம் சேர்ந்து, அங்கு நித்யர்களுடனும் முக்தர்களுடனும் வேதத்தை அநுஸந்தித்து ஸங்கீதலோகத்திலேயே அமையாத தெய்வகாநத்தால் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையும் பாடிப் பகவத்குணங்களை அநுபவிப்போம்.

*******************************************************

நெடுநாளாக நீங்காதிருந்த கர்மங்கள் முழுதும் நாம் அநுஷ்டித்த உபாயத்தால் நீங்கிவிட்டன. பின் பரமபதம் சென்று திவ்ய தம்பதிகளுக்குக் கைங்கர்யம் செய்து ஆநந்தத்தால் ஆடிப்பாடி வேதங்களின் தெய்வ காநத்தைக் கேட்டுப் பின் திரும்பி வராது அவ் வநுபவத்திலேயே மூழ்கிக்கிடக்கும்படி எம்பெருமானது அருளைப் பெற்றுவிட்டோம். ஆயினும் உடனே அவ்வநுபவத்தைப் பெறாது இன்னும் நாம் இக்கர்மபூமியில் இருப்பதற்குக்

காரணம் - நம்மைக் கொண்டு சேதநரை வாழ்விக்கத் திருவுள்ளங்கொண்ட ஸர்வேசுவர னுடைய ஸங்கல்பமும், அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு அநுபவிக்கக் காரணமான பாக்ய விசேஷமும், ஸ்ரீபாஷ்யம், அருளிச்செயல் முதலிய திவ்ய ஸூக்திகளை ஸேவித்து அநுபவிக்க வேண்டிய ஸுக்ருத விசேஷ முமேயாம்.

*****************************************************




ஸ்வாமி தேசிகன் - திருஅயிந்தை